©
தமிழ்நாடு அரசு
2018

[பதிவு எண். தநா/சிசிஎன்/467/2012–14.
[நிமு. எண். 197/2009.
[விலை ரூ. 6.40 பைசா.

# தமிழ்நாடு அரசு அரசிதழ்

**அசாதாரணம்** அதிகாரபூர்வமாக வெளியிடப்பட்டது

எண். 112] சென்னை, வெள்ளிக்கிழமை, மார்ச் 23, 2018
பங்குனி 9, ஹேவிளம்பி, திருவள்ளுவர் ஆண்டு–2049

## பாகம் இ – பிரிவு 1 (அ)

தலைமைச் செயலகத் துறைகளால் வெளியிடப்பட்ட பொதுவான சட்ட நெறிமுறைகள், அறிவிக்கைகள் அல்லது ஆணைகள், ஒழுங்குமுறை நெறிகள் இன்னபிற

அரசின் அறிவிக்கைகள்

வணிகவரிகள் மற்றும் பதிவுத் துறை

தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரிகள் சட்டம், 2017ன் கீழ் அறிவிக்கைகள்

(அ. நிலை எண்.40, வணிக வரிகள் மற்றும் பதிவு (ஆ1), 23 மார்ச் 2018,
பங்குனி 9, ஹேவிளம்பி, திருவள்ளுவர் ஆண்டு–2049)

**<u>எண்.எஸ்ஆர்ஓ ஆ–13</u>**

தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரி சட்டம் 2017–ன் (தமிழ்நாடு சட்டம் 2017ன் 19ல்) பிரிவு 164–ல் அளிக்கப்பட்ட அதிகாரங்களை நடிடைமுறைப்படுத்தி, தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரி விதிகள், 2017–ஐ மேலும் ததிருத்துவதற்கு இதன்மூலம் தமிழக ஆளுநரால் பின்தொடரும் விதிகள் உருவாக்கப்படுகிறது. அதாவது–

(1) இந்த விதிகள் தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரி (மூன்றாம் ததிருத்தம்) விதிகள், 2018 என அழைக்கப்படும்

(2) இந்த விதிகள், வேறு விதமாக தவிர, அவை அதிகாரப்பூர்வ அரசிதழில் வெளியான தேதி முதல் அமலுக்கு வருகிறது.

2, தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரி விதிகள், 2017:–

(i) விதி 45–ல் துணை விதி (1)ல், பின்வரும் வார்த்தைக்கு பின்னால், “இத்தகைய பொருட்கள் நேரடியாக வேலை செய்யும் வேலைத் தொழிலாளிக்கு அனுப்பபட்டும்”, இறுதியில் நிகழும், கீழ் வருவனவற்றை சேர்க்க வேண்டும்.

மற்றும் ஒரு வேலைத் தொழிலாளியிடமிருந்து இன்னொரு வேலைத் தொழிலாளிக்கு பொருட்கள் அனுப்பப்படும்போது, பொருளின் பிரதான உரிமையாளரோ அல்லது பொருளை அனுப்பும் வேலைத்தொழிலாளியோ செலுத்துச் சீட்டு வழங்கலாம்.

பொருள் ஒரு வேலை தொழிலாளியிடமிருந்து வேறு ஒரு வேலை தொழிலாளிக்கோ உரிமையாளருக்கோ அனுப்பப்படும் பட்சத்தில் பிரதான உரிமையாளர் வழங்கும் செலுத்துச் சீட்டில் பொருளின் அளவு மற்றும் அதைப் பற்றிய விவரிப்பு ஆகியவற்றை தெரிவித்து வேலை தொழிலாளி ஒப்புதல் வழங்கலாம்.

பிரதான உரிமையாளருக்கு திருப்பி அனுப்பும்போதோ அல்லது வேறொரு வேலைத் தொழிலாளிக்கு அனுப்பும்போதோ மேலும், ஒருவேலைத் தொழிலாளி ஒப்புதல் அளித்த செலுத்துச் சீட்டை தொடர்ந்து மற்றொரு வேலைத் தொழிலாளி ஒப்புதல் வழங்கலாம், அப்போதும் பொருளின் அளவு மற்றும் அதைப்பற்றிய விவரிப்பினை தெரிவித்து ஒப்புதல் அளிக்கலாம்.

(ii) விதி 127இல், பிரிவு (4) வார்த்தைக்கு பின் “ பத்தில் கூட்டத்தின் செயல்திறன் அறிக்கை ஒன்றை சரக்குகள் மற்றும் சேவைகள் வரி (GST) சபையிடம் வழங்கவேண்டும். என்ற வார்த்தைக்குப் பிறகு, ‘‘பத்திற்குள் என்பதற்குப் பதிலாக பத்தாம் நாள் வழங்க வேண்டும்’’ என்ற வார்த்தை செருகப்படும்.

(iii) விதிமுறை 129, துணை விதி (6)ல் “நிலைக்குழுவால் அனுமதிக்கப்பட்டபடி’’ எனும் வார்த்தைகளுக்கு பதிலாக ‘‘ஆணைக்குழுவால்’’ அனுமதிக்கப்படக்கூடியது என்று மாற்றப்படும்.

(iv) விதி 133ல், துணை விதி (3)க்கு, கீழ்க்கண்ட உப விதிமுறை சேர்க்கப்படலாம், அதாவது

(4) விதிமுறை 129இ துணைவிதி (6)ல் குறிப்பிடப்பட்டுள்ள பாதுகாப்பு தலைமை இயக்குநரகம் (Director General of Safeguards) அறிக்கையின் பரிந்துறை பிரிவு 171ன் அல்லது இவ்விதிகளின் மீறல் அல்லது மீறாமை பற்றியதாக இருந்தும் இவ்விடத்தில் மேல் விசாரிப்பு . விசாரணை தேவை என்று ஆணைக்குழு அதற்கான காரணங்களை எழுத்து பூர்வமாக பதிவு செய்தபின் சட்டம் மற்றும் விதிகளுக்கு உட்பட்டு மேல் விசாரணை செய்யுமாரு பாதுகாப்பு தலைமை இயக்குநரகத்துக்கு (Director General of Safeguards) அனுப்பலாம்.

(vi) விதி 134இ கீழ்காணும் விதியை மாற்றுதல் வேண்டும், அதாவது:-

134. பெரும்பான்மை தீர்மானம்: (1) அதிகாரசபையின் உறுப்பினர்களில் குறைந்தபட்சம் மூன்று உறுப்பினர்கள் அதன் கூட்டங்களில் அதம அளவு (கூட்டத்தை நடத்துவதற்கு வர வேண்டிய நபர்களின் குறைந்த பட்ச எண்ணிக்கை) வரம்பாக இருக்க வேண்டும்.

(2) ஆணையத்தின் ஒறுப்பினர்களுக்கு இடையில் எந்த ஒரு கட்டத்திலும் கருத்து மாறுபாடு ஏற்படும் பட்சத்தில் உறுப்பினர்களில் பெரும்பான்மையினரின் வாக்கெடுப்பு மற்றும் வாக்களிக்கும் கருத்தின் அடிப்படையில் அந்த முடிவு எடுக்கப்படும், மற்றும் வாக்குகளில் சமநிலை ஏற்பட்டால், தலைவர் இரண்டாம் நபராக கருத்து தெரிவிக்கலாம் அல்லது வாக்கு அளிக்கவேண்டும்.

(vi) விதி 138க்குப் பின், பின்வரும் விளக்கம், ஏப்ரல் 1, 2018 முதல், அமுல்படுத்தப்பட வேண்டும்–

விளக்கம்: இவ்வத்தியாத்திற்காக, இரயில்வே மேலும் சரக்குகள் அனுப்பப்படுவது, என்பது இரயில்வே மூலம் சரக்குகள் போக்குவரத்து, இரயில் மூலம் சரக்குகள் போக்குவரத்து மற்றும் இரயிலில் பொருட்களின் நகர்வு ஆகிய வெளிப்பாடுகளுக்குள் இரயில்வேயால் குத்தகைக்கு விடப்படும் பார்சல் இட எல்லை அடங்காது.

கா.பாலசந்திரன்,
(முதன்மை அரசு செயலாளர்)